<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 33/2022

Deposition of Witness : PW-1

Name : உஷா

Father's Name /W/o : க/பெ.மூர்த்தி

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : மின்னல் கிராமம், அரக்கோணம் வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 11.03.2024

குறுக்கு விசாரணை: ( பிரதிவாதிகள் 5 மற்றும் 6 தரப்பில்)

1. நான் தான் என் வீட்டில் கடைசி மகள் என்றால் ஆம். எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 11 வருடம் ஆகிறது. என் உடன்பிறந்தவர்களுக்கு என் தந்தை தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆம். என் தாத்தாவிற்கு என் அப்பா மட்டுமா என்றால் என் தாத்தாவிற்கு இரண்டு மனைவி. முதல் மனைவிக்கு பிறந்தவர் என் அப்பா. 2வது மனைவிக்கு 4 குழந்தைகள். 2வது மனைவியின் 4 பிள்ளைகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மொத்தம் எத்தனை சொத்திற்கு பாகப்பிரிவினை கேட்டுள்ளேன் என்றால் 2 ஏக்கர் 61 செண்டிற்கு பாகம் கேட்டுள்ளேன். என் தாத்தாவிற்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால் எவ்வளவு சொத்து என்று தெரியவில்லை. பூர்வீக சொத்தை விற்று காட்டுப்பாக்கத்தில் சொத்து வாங்கினார். பூர்வீக சொத்தை விற்பனை

செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பரப்பளவு எவ்வளவு தெரியுமா என்றால் தெரியாது. என் சகோதரிகளுக்கு கொடுத்த செட்டில்மெண்ட் நிலத்திற்கா வீட்டு மனைக்கா என்றால் வீட்டு மனை. அளவு தெரியுமா என்றால் 2000 சதுர அடி மேல் இருக்கும். அந்த சொத்து எப்படி என் தந்தைக்கு வந்தது என்றால் என் தாத்தா இறந்த பிறகு என் தந்தைக்கு மாறிவிட்டது. அவர் அனுபவத்தில் இருந்ததால் அரசாங்கம் கொடுத்த தோராய பட்டாவை வைத்துதான் செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் ஆவணத்தை தவிர அனைத்து ஆவணங்களும் என் தந்தை சுயமாக சம்பாதித்து வாங்கியது என்றால் இல்லை என் தாத்தா சொத்தை விற்று தான் இங்கு வந்து வாங்கினார். என் தந்தை எதுவும் சுயமாக சம்பாதித்து வாங்கவில்லை. என் அப்பா என் தந்தைக்கு ஒரே வாரிசு என்பதால் தாத்தா இறப்பிற்கு பிறகு சொத்து அவருக்கு தான் வரும் என்றாலும் அதை சுயமாக சம்பாதித்த சொத்தாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. சொத்தை கூட்டாக அனுபவித்து வருகிறேன் என்று சொல்வது பொய் என்றாலும் அனுபவித்திற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)